[9th September 1970

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இவ்வினா எழவில்லை.

THIRU A. R. DAMODARAN : May I know when the sanction was accorded for the payment of family pension and gratuity to this lady ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : 24—7—1969-லிருந்து 14-1-71 முடிய ஒரு மாதம் 113 ரூபாயும், 15-1-71 முதல் கடைசி வரையில் ரூ. 60-ம் அந்த அம்மையாருக்குக் கொடுத்ததாகச் சொல்லி யிருக்கிறார்கள். கிராஜுவிடியைப் பொறுத்த வரையில், ரூ. 2587 கொடுக்க வேண்டியதிருந்து, அதில் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பணம் ரூ. 1425-40 இருந்ததால், அதைக் கழித்துக் கொண்டு பாக்கியை அந்த அம்மையாரின் வயது வந்த பெண்கள் இருவருக்கும், வயதுக்கு வராத பெண்கள் இருவருக்கும் அந்த அம்மையாருக்கும் சேர்த்து ஐந்து பேருக்குமாகப் பணம் கொடுக் கப்பட்டது.

THIRU A.R. DAMODARAN : May I know the date, Sir ?

THE HON. THIRU O. P. RAMAN : That is not available.

Basin Bridge Thermal Power Station

*103. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) the action taken on the advance of Rs. 32 lakhs by the Tamil Nadu Electricity Board to a private contractor for the Basin Bridge Thermal Power Station without proper scrutiny ; and

(*b*) the total loss sustained by the Board ?

பேசின் பாலம் அனல் மின்சக்தி நிலையம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு மின்சார வாரியம் சரிவரப் பரிசீலனை செய்யாமல் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு பேசின் பாலம், அனல் மின் சக்தி நிலையப் பணிக்காக ரூ. 32 லட்சம் முன் பணம் கொடுத்ததன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(இ) இதனால் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட மொத்த விரயம் என்ன ?

9th September 1970]

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) வும் (இ) யும்: திருவாளர்கள் எஸ்கார்ட்ஸ் நிறுவனத்திற்கு பேசின் பிரிட்ஜ் மின்சக்தி நிலையத்தில் போலந்து நாட்டுக் கொதிகலன்கள் (Polish boilers) நிறுவுவதற்கான ஒப்பந்தமளித்தது, தொடர்பாக வாரிய அலுவலர்களின் மீது குற்றம் சாட்டப்பட்டதையொட்டி ஒழுக்கக் கண்காணிப்பு லஞ்ச ஒழிப்பு இயக்குநரலுவலகம் இ.பி.கோ. வின் கீழும், 1947-ஆம் ஆண்டு லஞ்சத் தடுப்புச் சட்டத்தின் கீழும் வழக்குப்பதிவு செய்துள்ளது. அவ்வழக்கு புலனாய்வில் உள்ளது.

Indian Forest Service

*104. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) the number of Senior time scale posts of Indian Forest Service in the State Cadre that are vacant as on date ;

(*b*) the period for which they are kept vacant ;

(*c*) the reasons therefor ; and

(*d*) whether there is any proposal to fill up these posts ?

இந்திய வனத்துறைப் பணி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இன்றைய நிலவரப்படி மாநிலத் தரத்தில் இந்திய வனத்துறைப் பணியில் காலியாகவுள்ள முதுநிலை காலக்கிரமச் சம்பள ஏற்றப் பதவிகள் (Senior time-scale posts) எத்தனை ?

(இ) அவை எவ்வளவு காலமாக காலியாக உள்ளன ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

(எ) இந்தப் பதவிகளை நிரப்பும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) பதினொன்று.

(இ) 1-10-66 முதல் பதினொரு பதவிகள், 21-3-70 முதல் மூன்று பதவிகள்.

(உ) மாநில வனத்துறைப்பணி அதிகாரிகளின் பதவி உயர்வுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 13 பதவிகள் இது காறும் நிரப்பப் படவில்லை. இந்திய வனத்துறைப் பணிக்கு (IFS) பதவி உயர்வு பெறுவதற்கான மாநில வனத்துறைப் பணி அதிகாரிகளின் தேர்வுப்பட்டியல் இந்திய அரசால் இன்னும் அனுப்பப்படவில்லை. ஒரு இந்திய வனப் பணி அதிகாரியை இள நிலையிலிருந்து முதுநிலைக்கு 21-3-70 முதற்கொண்டு பதவி உயர்த்துவது குறித்து அரசு பரிசீலித்துவருகிறது.

(எ) ஆம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : 1967 முதல் 1969 வரை இந்த 14 பதவிகளும்— ஏறக்குறைய 3 ஆண்டு காலமாக— நிரப்பப்படாமல் இருப்பது சரியா என்பதை அரசு சிந்திக்குமா ? அதோடு உடனடியாக இப்படிப்பட்ட இடங்களை நிரப்ப இனியாவது அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.